**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 325 நாள்: 24.07.2026

**தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (24.07.2026) தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு-158க்குட்பட்ட நந்தம்பாக்கம், எம்.ஜி.ஆர். நகரில் அமைக்கப்பட்டுள்ள நவீன மாடுகள் காப்பகம், அப்பகுதியில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் நர்சரி பண்ணைகள் மூலம் செடிகள், மரக்கன்றுகள் நடும் பணி, வார்டு-156க்குட்பட்ட மாரியம்மன் கோவில் தெரு மற்றும் எஸ்.எஸ். கோவில் தெருவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, அப்பகுதியில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டி, அடையாறு மண்டலம், வார்டு-170க்குட்பட்ட தொல்காப்பியப் பூங்காவில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் நர்சரி பண்ணைகள் மூலம் செடிகள், மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணி, பெருங்குடி மண்டலம், வார்டு-183க்குட்பட்ட கொட்டிவாக்கம் சாலையில் உள்ள மையத்தடுப்புகளில் செடிகள் நடுதல் மற்றும் வண்ணங்கள் பூசுதல் உள்ளிட்ட அழகுபடுத்தும் பணி, சோழிங்கநல்லூர் மண்டலம், பாலவக்கம் சாலையில் உள்ள மையத்தடுப்புகளில் செடிகள் நடுதல் மற்றும் வண்ணங்கள் பூசுதல் உள்ளிட்ட அழகுபடுத்தும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திடவும், வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் உள்ள வண்டல் மண்ணை தூர்வாரி அகற்றிடவும், அமைக்கப்பட்டு வரும் நர்சரி பண்ணையில் மரக்கன்றுகள் உற்பத்தியினை அதிகரித்திடவும், மாடுகள் காப்பகங்களை பராமரிக்கவும், சாலைகளின் மையத்தடுப்புகளில் அழகுபடுத்தும் பணியினை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**